# உலகமயவாக்கலுக்கு தயாராக்கும் புதிய கல்விச் சீர்திருத்தம்; வட- கிழக்குப் பற்றிய ஒரு நோக்கு

- கே. ரீ. கணேசலிங்கம்

இலங்கையின் கல்வி சீர்திருத்தமென்பது காலநிலை மாற்றம் போன்றது. சுதந்திர இலங்கையிலேயே பல கல்விக் கொள்கைகள் முன்மொழியப்பட்டு அமுல்படுத்தல் முழுமை பெற முன்பு மறு கல்வி சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் அரசாங்கங்கள் ஆட்சிக்கு வருகின்றன. இதில் வடக்குக் கிழக்கு இனமுரண்பாட்டினால் தெளிவான உறவைத் தென்இலங்கையுடன் கொண்டிருக்காமையினால் அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கியது. இது போரினால் மேலும் விரிவடைந்ததுடன் தமிழ்-சிங்கள கல்வி உறவும் பாதிப்புக்குள்ளாகியது. இந்நிலையில் 1997 களில் அறிமுகமான புதிய கல்விச்சீர்திருத்தம் வடக்கு கிழக்குக்கு காலம்தாழ்த்தியே அறிமுகமானது. இப்புதிய கல்விக்கொள்கைகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் அமுல்படுத்தப்பட்ட பாணியில் இலங்கையிலும் அமுல்படுத்தப்பட்டது. ஆனால் வடக்கு கிழக்கில் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுத்ததாக கருத முடியாது. போர் ஒரு காரணமாக கூறப்பட்டு வந்தாலும் போரிற்குப் பின்பு ஏற்பட்டுள்ள தற்கால அமைதியிலாவது முழுமையான அமுல்படுத்தலுக்கான தயார்படுத்தலை அரசாங்கங்கள் செய்துள்ளதா என்பது ஆய்வுக்குரிய அம்சம்.

இலங்கையின் கல்வி பிரயோகத்தில் மத்திய அரசின் பாடசாலைகள், மாகாண சபையின் பாடசாலைகள் என இரண்டாக வகைப்படுத்திய நிர்வாகம் காணப்படுகின்றது. குறிப்பாக தேசியப்பாடசாலைகள் (National School) மத்திய அரசின் கண்காணிப்பிலும் இதர பாடசாலைகள் மாகாண சபையின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்குவதுடன் தனியார் பாடசாலைகளும் தனித்துவமான பங்கினை வகிக்கின்றது. வடக்கு கிழக்கில் 38 தேசியப் பாடசாலைகளும், 1941 மாகாணப் பாடசாலைகளும், 06 தனியார் பாடசாலையுமாக 1985 பாடசாலைகள் காணப்படுகின்றன. (Statistical information ; 2004) ஏறக்குறைய 623843 மாணவர்கள் 2003இல் கல்வி கற்றதோடு 25676 ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் எண்ணிக்கை காணப்படுகின்றது.

வடக்கு கிழக்கு பாடசாலைகளின் எண்ணிக்கையுடன் மூன்று பல்கலைக் கழகங்களும் மற்றும் இணைந்த பல்கலைக்கழகங்களும், தொழில்நுட்பக்கல்லூரிகளும், மற்றும் உயர்கல்வி நிறுவனங்களும் பலவும் காணப்படுகின்றன. பாடசாலைகள் போன்றே பல்கலைக்கழகங்களிலும் தமிழ், சிங்கள, முஸ்லீம் மாணவர்கள் பங்கீடு மேலும் அதிகரித்துள்ளது. பாடசாலைகளில் சீர்திருத்தங்கள் போன்று பல்கலைக்கழகங்களும் தனித்துவமாக இயங்கினாலும் சீர்திருத்தங்கள் முன் வைக்கப்பட்டன. மேற்கு நாடுகளில் எவ்வாறு கற்பித்தல், கற்றல் அணுகுமுறைகள் காணப்படுகின்றதோ அவ்வாறே இலங்கையிலும் கற்றல் சமூகத்தை நவீனமயப்படுத்த வேண்டுமென்ற நோக்குடன் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தத்தில் மூன்று பிரதான மாற்றங்களுக்கான அடிப்படைகள் முன்வைக்கப்பட்டன.

(1) நவீனயுகத்திற்கு ஏற்ப தகவல் தொழில்நுட்பத்தை (Information Technology) புகுத்துதல்.

(2) செயல்முறைக்கல்வியை ஊக்குவித்து தனியார் உற்பத்திக்கான சூழலை ஏற்படுத்தல்.

(3) ஆங்கில மொழிப்பிரயோகத்தை மேலும் விரிவுபடுத்தி சர்வதேசத்தோடு இலங்கையை இணைத்தல். (General Education Reforms : 1997).

ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, பல்கலைக்கல்வி என்பனவற்றில் புதிய கல்வி சீர்திருத்தம் மேற்குறிப்பிட்ட மூன்றையும் பிரதான இலக்காகக் கொண்டு செயல்பட்டது. இக்காரணிகளோடு பலவற்றை இலக்காகக் கொண்டிருந்தாலும் அவையாவற்றையும் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கைக்குள் அடக்கிவிடலாம்.

## II

வடக்கு கிழக்கு மாகாணத்தின் அரசியலும் கல்வியும் வடகிழக்கு மாகாண சபையுடன் இணைந்திருந்தாலும் அதற்கான அமுலாக்கல் சிக்கல்கள் அதன் பலவீனமான அதிகாரத்தையும் பிரயோகிக்க முடியாது விட்டது. அதுமட்டுமன்றி தமிழர்களின் அரசியல் வாழ்வை கல்வியை சிதைப்பதனால் மாற்றியமைக்கலாமென

ஆட்சியாளர்கள் கருதினர். இதனால் அரசியல்போக்கு கல்வியின் தாக்கங்களையும் அடிப்படைகளையும் வலுவூட்டியது. இலங்கை அரசாங்கம் இன வேறுபாடுகளிலான நெருக்கடிகளை சிங்கள மக்களில் ஏற்படப்போகும் ஆபத்துக்கள் எனக்கருதி கல்வியை ஒடுக்கியது. சம காலத்தில் ஆங்கிலத்தை தமிழர்கள் அதிகமாக கற்றதனால் ஏற்பட்ட விளைவுகளையும் சிங்கள அரசியல் தலைவர்கள் தவறாகவும் தமது இனத்திற்கு எதிரானதெனவுமே கருதிச் செயல்ப்பட்டனர். தமிழர்களின் கல்வித்தரத்திலான போட்டியை இனப்பகைக்கான போட்டியாக மாற்றி தமிழர்களுக்குரித்தான திறமைகளை முறியடித்தனர். (Base line study on the Primary in service – system in the North – East Province : 2000) அரசியல் ரீதியில் சிங்கள தலைமைகள் தமிழர்களின் கல்விக்கு எதிராக சட்டரீதியில் தடைகளை ஏற்படுத்தி இளம் சமுதாயத்தினரை விரக்தியுடையவர்களாக மாற்றினர். உயர்கல்விக்கான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டதுடன் வேலைவாய்ப்புக்கள் சாத்தியமற்றதாகியது. இது வட- கிழக்கு அரசியல் ஆயுதப் போரட்ட அரசியல் கலாசாரத்துக்கு வித்திட்டது. இவ் ஆயுதப்போராட்டம் அரசியல் ரீதியான போர்கள் ஏற்படுவதற்கு காரணமாகியது. வடக்கு கிழக்கு மீது தென் இலங்கையும், இந்தியாவும் பல தடவை பல யுத்தங்களை பிரகடனப்படுத்தி அதிகார அரசியலை அமுல்படுத்த முயன்றது. இதனால் வட – கிழக்குப் பிரதேசம் முழுவதும் இடப்பெயர்வு தவிர்க்க முடியாத அரசியல் காரணியாகியது. (Ibid : 2000) இடப்பெயர்வினால் கல்விக்கான வாய்ப்புக்களின்மை, சுகாதார வசதிகளற்ற நிலை, போசாக்கில்லாத உணவு பழக்கம், பாடசாலைகள் மூடப்பட்ட நிலமை என பல காரணிகள் கல்வி நோக்கிய மாணவர்களின் சூழலை பாதித்தது. வடக்கு கிழக்கில் போரால் முற்றாகவே மூடப்பட்ட பாடசாலைகளின் விபரம் இணைக்கப்பட்டுள்ளது.

| மாவட்டம் | இயங்கும் பாடசாலைகள் | மூடப்பட்ட பாடசாலைகள் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 410 | 75 |
| கிளிநொச்சி | 89 | 03 |
| முல்லைத்தீவு | 94 | 12 |
| வவுனியா | 181 | 12 |
| மன்னார் | 94 | 21 |
| திருகோணமலை | 244 | 24 |
| மட்டக்களப்பு | 308 | 14 |
| அம்பாறை | 398 | 04 |

**(Source : School Census, 1999.)**

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற இராணுவப் பயன்பாட்டுடன் உட்பட்ட பகுதியில் உள்ள பாடசாலைகள் பல தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. அவற்றின் முழுமையாக விபரம் பின்வருமாறு

| உயர்பாதுகாப்பு வலயம் | பாதிக்கப்பட்ட பாடசாலைகள் |
|---|---|
| நிலக்காடு | 04 |
| ஊருண்டி | 01 |
| மண்டைதீவு | 02 |
| கிழக்கு அரியாலை | 14 |
| தனங்களப்பு | 02 |
| எழுதுமட்டுவாழ் | 11 |
| அம்பன் | 18 |
| பல்லம்பை | 01 |
| பருத்தித்துறை | 07 |
| தெல்லிப்பழை | 02 |
| அராலி | 18 |
| மொத்தம் | 80 |

**(Source : Statisical hand Book – Jaffna 1999)**

எனவே வடக்குகிழக்குப் பிரதேசம் விசேடமான பிரச்சினைகளைக் கொண்ட பிரதேசமாக விளங்குகின்றது. இலங்கையின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடும்போது பாடசாலை, பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த உயர்கல்விக்கான வாய்ப்புகள் பெருமளவில் கிடைக்காமல் போகின்றது. பௌதீக வளங்களின்மை, கல்விக்கான சுற்றுசூழலின்மை, உள் கட்டமைப்பு முறைகளில் சமமான போதிய வளர்ச்சியின்மை, கலைத்திட்டங்களில் காணப்படும் முரண்பாடுகள் (வரலாறும் சமூகக்கல்வியும்) என்பன கல்வியில் அதிகளவான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இவையாவற்றுக்கும் அரசியல் ரீதியான முரண்பாடே முக்கிய காரணியாக உள்ளது. புதிய கல்விக் கொள்கைகளின் அமுலாக்கத்தைப் பாதிக்கும் பிரதான விடயமாக இனப்பகைமை விளங்ககிறது. இது அரசியல் ரீதியில் தமிழர் - சிங்களவர் என்ற விரோதமான போக்கு கல்வியில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக விளங்குகின்றது. அரசியல் ரீதியான பகைமைத்தணிவுக்காலமாகிய கடந்த மூன்று வருடங்கள் புதிய கல்வி சீர்திருத்தத்தின் அமுலாக்கம் பூரணமான நிறைவைப் பெறமுடியாதுள்ளது. காரணம் இனரீதியான வளர்ந்த பகைமைத்தன்மையை அரசாங்கத்தால் முறியடிக்க முடியாதுள்ளது. குறிப்பாக வடகிழக்குப் பிரசேதங்களில் அரசசார்பற்ற நிறுவனங்களே அதிகளவான நிதியினை நிரந்தரமான கட்டுமானத்துக்கு ஒதுக்காது விடுத்தாலும் ஓரளவேனும் சாத்தியப்பாடுடைய நிறுவனமயப்படுத்தப்பட்ட கல்வி சூழலை சீர்படுத்தி வருகின்றது. (Ibid : 2000) அதனை தவிர்த்து அரசாங்கத்தின் கல்வி அமைச்சு, மாகாணசபைக்கான கல்வி அமைச்சு என்பன மேற்கொள்ளும் நிதி ஒதுக்கங்கள் பகிர்ந்தளிப்புக்களின் தன்மைகள் முரண்பாடானதாக காணப்படுகின்றது. மாகாணசபையின் கல்வி அமைச்சின் அதிகாரம் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதனால் வடக்கு கிழக்கு பிரசேதத்தின் கல்வி நடவடிக்கைகள் முழுமையான வளர்ச்சியை அடைய முடியாதுள்ளது.

## III

புதிய கல்விச்சீர்திருத்தத்தின் கீழ் அரசாங்கத்தின் கல்வி அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைக்கு பதிலாக சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களும் அவற்றின் ஒத்துழைப்போடு இயங்கும் உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புக்களுமே கணிசமான பணிகளை

ஆற்றிவருகின்றன. இதுவே இன்றைய கல்விக் கொள்கையின் போக்கை நிர்ணயிக்கின்றதாக அமைகின்றது. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் காணப்படும். கல்விக்கொள்கைகளை இலங்கை போன்ற வறிய நாடுகளில் அமுல்படுத்த முயலும்போது போதிய வசதிவாய்ப்புக்களையும், சூழலையும் உருவாக்குகின்ற அமைப்புக்காக அரசசார்பற்ற நிறுவனங்கள் காணப்படுகின்றன. அத்தகைய அமைப்புக்கள் தமது அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கொள்கைகளுக்கு ஏற்பவே பணிபுரிந்து கொண்டு அத்தகைய நாடுகளுக்கு சேவை புரியக்கூடிய பிரிவினரை தயார் செய்கின்ற சூழலை மேற்கொள்கின்ற நோக்குடனேயே செயல்ப்படுகின்றன. (Base line study on the primary in service, system in the North East Province: 2002) . இதனால் மேற்கு நாடுகளின் கொள்கைகளுக்கு ஏற்ப வறிய நாடுகளின மனிதவளத்தினை தயார் செய்வதுடன் மேற்கு நாடுகளின் வளங்களை பிரயோகப்படுத்தும் மாதிரிகளை தயார் செய்யவும் சந்தர்பம் அளிக்கின்றது. இது முழு இலங்கையையும் மேற்குக்கு சார்புடையதாக மாற்றுவதாகவே உள்ளது. புதிய கல்வி சீர்திருத்தத்தில் முதன்மைப்பட்டிருக்கும் கல்வி கொள்கையானது மீளவும் ஆங்கிலக்கல்வியை அமுலாக்க முனைவதுடன், தகவல் தொடர்பாடலையும், தனியார் பொருளாதாரத்தையும் கட்டிவளர்க்க முயன்றுவருகின்றமையின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ள முடிகின்றது. இதிலிருந்து வடக்கு கிழக்கும் விதிவிலக்காக செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது. வடக்கு கிழக்கு போர்காலத்தில் தெற்கோடு ஒப்பிடும்போது பின் தங்கியிருக்கின்றதென்றவாதம் எல்லாத்துறைகளிலும் பேசப்பட்டாலும் உலக மயவாக்கலுக்கான பங்களிப்பில் தெற்கைவிட வடக்குகிழக்கு குறைந்த நிலையிலேயே ஒத்துழைத்திருகிறது என்பதே அந்த வாதத்தின் சரியான கருத்துருவாக்கமாகும். போர்க் காலத்தில் அரசாங்க சேவைகள் மற்றும் அமுலாக்கங்கள் முற்றாக பாதிப்படைந்ததினால் (Social Harmony component in Highter Education Programme : 2002) இலங்கை அரசு அவற்றை அமுலாக்குவதில் ஏற்கனவே பின்பற்றப்பட்ட அணுகுமுறையை தொடர்ந்தும் கடைப்பிடித்தது. இனரீதியான முரண்பாடும் அதற்கெதிரான போரும் இலங்கை அரசாங்கத்திற்கு வாய்ப்பைக் கொடுத்தது.

இலங்கை அரசாங்கத்திற்கு வடகிழக்கின் கல்வி அபிவிருத்தி ஆபத்தான ஒன்றாக கருதியதனால் அமுலாக்கத்தை

முழுமைப்படுத்தாது செயல்பட்டது. மேற்குலகத்திற்கு தெற்கு அதிக சேவகம் செய்து அதிகமான இலாபத்தை அடையும் முயற்சியில் ஈடுபட்டதுடன் உலகத்திலிருந்து தென் இலங்கையோ வடகிழக்கு இலங்கையோ தனித்திருக்க முடியாதது என்ற நியமத்தை உலகமாற்றம் உணர்த்தியது. இதனால் வடகிழக்குப் பிரதேசக்கல்வியில் மேற்கு சார்பாக அரசசார்பற்ற அமைப்புக்கள் செயல்பட்டுவந்தன. ஆனால் அவ்வமைப்புக்களின் பிரதான நோக்கம் சுதேசமான கல்வி வளத்தையோ, அபிவிருத்தியையோ இலங்கை மக்களிடம் ஏற்படவிடாது தடுப்பதுடன் தமது தகவல் தொழில்நுட்பத்தில் தங்கியிருக்கின்ற இலங்கையாக மாற்றுவதாகவே அமைந்திருந்தது. அதுவே புதிய கல்விக் கொள்ளையின் பிரதான நோக்காக விளங்குகிறது. இத்தகைய மேற்கின் நோக்கத்தை இலங்கையின் ஆட்சி செய்யும் அரசாங்கங்களும் நவீனத்துவம், அபிவிருத்தி என்று கூறிக்கொண்டு செயல்படுத்தி வருகின்றது. ஆனால் இவையாவும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஆளணியை திரட்டுவதுடன் அந்த நாடுகளின் உற்பத்திகளை நுகர்வதற்கான ஏற்பாடாகவே காணப்படுகின்றது. (Nicolas Inigo carrera : 2003)

அடுத்து தொடர்ச்சியற்ற அரசாங்கங்களின் ஆட்சியினால் எத்தகைய சீர்திருத்தமும் தற்போது அமுலாக்க முடியாதுள்ளது. மாறி மாறி இரண்டு கட்சிகள் ஆட்சியை கைப்பற்றினாலும நிலையான கொள்கையை எந்தக்கட்சியும் கொண்டிருக்காதது மட்டுமன்றி ஒரு கட்சி வகுத்த கொள்கையை மறுகட்சி நிராகரிக்கின்ற அரசியல் பாணி கல்விக் கொள்கையை நிலைப்படுத்த முடியாத சூழலுக்குள் தள்ளிவருகின்றது. இதனால் புதிய கல்விக் கொள்கையை எல்லா அமைப்புக்களுக்கும், நிவனங்களுக்கும் சாதகமானதாக அமைக்க முயன்றபோதும் (General Education Reforms : 1997) அரசியல் எல்லைகள் நிர்ணயங்கள் என்பன இலங்கையின் கல்வி வரலாற்றில் புதிய கல்வி சீர்திருத்தத்தையும் வழமையானதொன்றாக மாற்றியது. இது தென் இலங்கைக்கு அதிக பொருத்தம் மிக்கதாக அமைந்ததோடு வடக்கு கிழக்குக்கு சிங்கள – தமிழ் மோதலின் தொடர்ச்சியான ஒன்றாகவே விளங்கியது. வளர்ந்த நாடுகள் வகுத்த திட்டமிடலையும் மீறி தென் இலங்கை அரசியல் சக்திகள் ஆட்சிமாற்றத்தையும், கட்சி அரசியலையும் இன முரண்பாட்டையும் முன்னிறுத்தி வடக்கு மீதான கல்வி கொள்கையில் பாரபட்சத்தை காட்டி வருகின்றது.

## IV

வடகிழக்கு பிரதேசம் இரண்டு வகையான நெருக்கடியை கல்விக் கொள்கைகள் தொடர்பாக எதிர்நோக்கிவருகிறது. ஒன்று, தென் இலங்கை அரசுகள் காட்டும் பாரபட்சமான அணுகுமுறையோடு அரசியல் உள்நோக்கங்களைக் கொண்டு புறக்கணிப்புகளை கையாளுகின்றமை ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்கல்வி வரை வசதி வாய்ப்புக்களற்ற, அமுல்படுத்தலற்ற முன்பின் முரண்பாடான பிரயோகப்படுத்தலினூடாக பாதிப்பினை ஏற்படுத்தி வருகிறது. கல்வித் தேவைகளை உரிய காலத்தில் நிறைவேற்றாத போக்கும் போதிய தொழில்தகமைக்கு வழிகாட்டாத தன்மையும், வடகிழக்கு பிரதேசம் பாதிப்புக்குள்ளாக காரணமாகின்றது. சாதாரணமாக பல்கலைக்கழக அனுமதியில் காட்டப்படும் பாரபட்சத்தையும் குழறுபடியையும் பின்வரும் தகவல் எடுத்துக்காட்டுகின்றது.

**யாழ் மாவட்டத்தில் பொறியியல் துறைக்கு அனுமதிபெற்ற மாணவர்களின் சதவீதம் (கோட்ட ரீதியாக)**

| ஆண்டு | உண்மையாக எடுக்கப்பட்டது | எண்ணிக்கை அடிப்படையில் எடுக்க வேண்டியது | சதவீதஅடிப்படையில் எடுக்கவேண்டியது | இலங்கை முழுவதுமான மா.கோ.எண் |
|---|---|---|---|---|
| 1993/1994 | 42 | 42 | 42 | 485 |
| 1994/1995 | 23 | 42 | 39 | 452 |
| 1999/2000 | 34 | 42 | 45 | 521 |
| 2000/2001 | 33 | 42 | 49 | 571 |
| 2001/2002 | 34 | 42 | 51 | 584 |
| 2002/2003 | 36 | 42 | 50 | 577 |
| 2002/2003(A) | 37 | 42 | 50.1 | 580 |
| 2003/2004 | 27 | 42 | 50.1 | 580 |

(ஆதாரம் : தினக்குரல்)

இரண்டாவது, உலகமயப்படுத்தலுக்கான தயார்ப்படுத்தலை எதிர்கொள்கின்ற நெருக்கடிக்கு வடக்கு கிழக்கு முகங்கொடுக்கின்றது. இது பிரித்தானியர் காலத்திலிருந்து நிகழ்ந்து வந்தாலும் இடைப்பட்ட காலத்தில் சுதேச மொழி, சுதேச பொருளாதாரம் என்பன உலக மயவாக்கத்திற்கு எதிரானதாக வடகிழக்கை மட்டுமல்ல இலங்கையையும் மாற்றியிருந்தது. ஆனால் மீண்டும் புதிய கல்வி சீர்திருத்தம் என்ற போர்வையில் தயாராகும் கல்வி கொள்கை சுதேச மொழி, பண்பாடு, விழுமியம் என்பவற்றை நிராகரிக்கவும் மேற்கு உருவாக்கிவரும் தகவல் பொருளாதாரத்திற்கு இசைவாக தயாராக்கும் போக்கு ஆபத்தானதாக நோக்கப்படுகின்றது. எனவே புதிய கல்வி சீர்திருத்தத்தை பிரயோகிக்கும் ஒவ்வொரு சந்தர்பத்திலும் அதனால் ஏற்படும் அரசியல் ஆபத்துக்களை புரிந்து கொண்டு செயல்படுவதே பொருத்தமான பிரயோகமாக அமையும். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை (ISGA) யின் கட்டமைப்புக்குள் மாற்றத்தை ஏற்படுத்தும்போது உலகமயப்படுத்தலின் அரசியல் உள்நோக்கங்களை புரிந்து கொண்டு கல்விக் கொள்கையை சரிவர அமுலாக்க முடியும். வடக்கு கிழக்கு பிரதேச கல்விக்கான மாற்றுக்கொள்கை ஒன்றை வரைபுக்கும், ஆய்வுக்கும் உட்படுத்துவது அவசியமானதாகும்.

# Reference :


1) Statistical information; planing branch ministry of Education cultural Affairs & sports North East province, Trincomalee, 2004.
2) Base Line study on the primary in – service system in the North East province : ministry of Education . Cultural Affairs sports, NEP and GTZ/ TIP. Trincomalee, March 2000.
3) Chris Allen, warfare, Endemic violence & state collapse in Africa: Social Harmony component in Higher Education programme. Pre implementation support, center for conflict studies utrecht University, Novemeber 2002.
4) Nicolas Inigo Carrera; From worker;s movement to movement of the unemployed 1870 – 2001, Jomo K.S. And khoo Khayjin (Ed) Globalization : and Its DISCONTENTS REVISITED. Sephis Tlilika, India, 2003.
5) General Education Reforms : The presidential Task force on Genaral Education, Sri Lanka. 1997.
6) கலாநிதி. சபா. ஜெயராசா, கல்வியில் புதிய சீர்திருத்தங்கள் ஒரு விளக்கநிலை நோக்கு, பட்டதாரி ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி அமைப்பு, யாழ்ப்பாணம், 1999.